# தொல்காப்பியம் சுட்டும் தொகை என்ற சொற்பொருளாராய்ச்சி

**வே. விக்னேசு**
**உதவி பேராசிரியர், தமிழ்த் துறை**
**பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,**
**கோயம்புத்தூர்**

**தோற்றுவாய்**

ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி எனச் சிறப்புப் பாயிரத்துள் நிறுத்த முறையானே எழுத்ததிகாரத்தாற் எழுத்திலக்கணங் கூறி, சொல்லதிகாரத்தாற் சொல்லிலக்கணங் கூறுகின்றார். அச்சொல்லதிகாரத்தில், கிளவியாக்கம் முதலாக உரியியல் ஈறாகக் கிடந்த எட்டியல்களினுள்ளும் உணா;த்துதற்கு இடனின்றி எஞ்சி நின்ற சொல்லிலக்கணங்களைத் தொகுத்துணர்த்தும் எச்சவியலுள் தொகை மொழியின் வகையைக் கூறும் நூற்பாவிலிடம் பெறும் 'தொகை' என்ற சொற்பொருளாராய்ச்சியே இக்கட்டுரை ஆராயக்கொண்ட ஆய்பொருளாம்.

**தொகைமொழியின் வகை**

**'வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே**
**வினையின் றொகையே பண்பின் றொகையே**
**யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்**
**றவ்வா றென்ப தொகைமொழி நிலையே' (சொல். எச்சவியல். நூ. 16)**

எனவரும் நூற்பா, தொகைமொழி நிலைமை வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்று கூறப்படும் அவ்ஆறு என்பா் ஆசிரியா் என்னுங் கருத்தினதாம்.

வேற்றுமை முதலாய அறுவகைத் தொகைமொழிகளும் 'தொகை'யெனப் பெயர் பெற்றமைக்குக் காரணங்கூறுங்கால் உரையாசிரியன்மாருள் கொள்கை வேறுபாடுடைமையான் அவற்றைத் தொகுத்துக் காண்டலும் ஈண்டு வேண்டத்தக்கதாம்.

**இளம்பூரணர் கருத்து**

'வேற்றுமையுருபு தொக்கு நின்ற தொகை' என்பது இளம்பூரணா் கருத்தாம். இக்கருத்தும் இந்நூற்பாவிற்கு அடுத்த நூற்பாவின்கண் உள்ளது.

**சேனாவரையர் கருத்து**

தொகைச் சொற்குப் பெயர்க்காரணங் கூறுங்கால் இருதிறத்து ஆசிரியா் கொள்கைகளை எடுத்துரைக்கும் சேனாவரையா் அவற்றுள் ஒன்றனையே இலக்கணமாக ஏற்றுக் கொள்கின்றார். அவ் இருதிறத்தார் கொள்கைகள் வருமாறு:

(க) வேற்றுமையுருபும், உவமஉருபும், உம்மையும், வினைச்சொல்லீறும், பண்பையுணா்த்தும் ஈறும் இத்தொகைச் சொற்கள் அல்லாததோா் சொல்லும் தொக்கு

நிற்றலின் தொகையெனப் பெயர் பெற்றது என்பார் ஒருதிறத்தார். இவர்கள் மதம்படி தொகுதல் என்பது ‘மறைந்து நிற்றல்’ எனப் பொருள்படும்.

**சான்று:** சோற்றையுண்டான் என்னும் விரி, சோறுண்டான் எனத் தொக்கி (மறைந்து) நிற்றல்.

(உ) வேற்றுமை முதலாய அறுவகைத்தொகைச் சொற்களும் அவ்வவ் பொருளிலேயே இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலின் தொகையாயிற்று என்பார் மற்றொரு திறத்தார். இவர்கள் கருத்தின்படி தொகுதல் என்பது இயைதல் (சேர்தல்) எனப் பொருள்படும்.

**சான்று:** சோறுண்டான் எனப் பிளவுபடாது ஒட்டி (இயைந்து) நிற்றல்.

இவ்விரு திறக் கொள்கையினருள் முன்னைய திறத்தார் கொள்கையை மறுக்கும் சேனாவரையர், பின்னைய திறத்தார் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றார். முதற்கருத்தை அவர் மறுக்குமாறு:

‘செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒரு சொன்னீர்மைப் படாதனவுந் தொகையாவான் சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கனவில்லை யெனினும் தொகையென வேண்டற்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலிற் றொகை யென்பார்க்கும் ஒட்டியொரு சொன்னீர்மைப் படுதலுந் தொகையிலக்கணமெனல் வேண்டும். அதனான் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினுந் செல்லாமையின், எல்லாத் தொகைக் கண்ணுஞ் செல்லுமாறு ஒட்டியொரு சொல்லாதல் தொகையிலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியர்க்கு இதுவே துணிவெனப்படும்’ (சொல். சேனா. நூ. 412). என்பது சேனாவரையர் வழங்கும் மறுப்பாம்.

அஃதாவது, செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என்னும் வினைமுற்றுத் தொகைகள் இரண்டும் ஒட்டி ஒரு சொல் போல இசைக்காமல் பிளவுபட்ட நிலையில் இசைப்பன. ஆதலின், ‘ஒட்டி ஒரு சொல் போல் இசைப்பதே தொகை’ என்னும் இலக்கணத்தோடு மாறுபடுகின்றது. ஆதலால் இவை தொகையாகா என விலக்கப்பட்டுவிடும். ஆயின், செய்தான்பொருள், இருந்தான் மாடத்து என்னும் இவ்விரு தொகைகளின் ஈற்றில் ஐயும் கண்ணுமாகிய வேற்றுமையுருபுகள் தொக்கு (செய்தான் பொருளை, இருந்தான் மாடத்தின்கண் என்னுமாப்போல) நிற்கின்றன. ஆகவே, ஒட்டி ஒரு மொழி போல் இசைப்பதே தொகையென்பாரும் இவற்றைத் தொகையென்றே கூறவேண்டியுள்ளது.

இங்ஙனமே, வேழக்கரும்பு, கேழற்பன்றி என்ற இரு பெயரொட்டுப் பண்புத்தொகைகளில், இடையில் மறைந்து நிற்கும் உருபு ஏதுமில்லை. ஆகலின், ‘உருபு முதலியன தொகுதலின் தொகையாயின’என்னும் இலக்கணத்தோடு மாறுபடுகின்றமையின், அக்கொள்கையுடையோரால் இவை தொகையாகா என விலக்கப்பட்டுவிடும். ஆயினும், இவை ஒட்டி ஒரு மொழிபோல் நிற்றலின் தொகையேயாம். ஆகவே, உருபு முதலியன தொகுதலின் தொகையாயின என்பாரும் வேழக்கரும்பு, கேழற்பன்றி என்பவற்றை, அஃதாவது, உருபே இல்லாது ஒட்டி ஒரு சொல்லாக நிற்குஞ் சொற்களை மறுத்தற்கில்லை உடன்படுவாராவர்.

இன்னவகையால் நோக்கில், வேற்றுமைப் பொருள் முதலிய பொருள்களில் இரண்டு முதலிய சொற்கள் ஒட்டி ஒரு சொல்லாக இசைப்பன தொகை என்னுங் கருத்தினரால், செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என்பன தொகையாகா என விலக்கப்பட்டுவிடும். இங்ஙனமே, உருபு முதலியன தொகுதலின் தொகையாயின என்னுங் கருத்தினரால் உருபு

இல்லாமையால் தொகுதலும் இல்லாத ஒட்டி ஒரு சொல்லாக இசைக்கும் வேழக்கரும்பு, கேழற்பன்றி என்பவற்றைத் தொகையென உடன்படுதல் வேண்டும்.

அன்றியும், வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை ஆகிய மூன்றற்கும் உருபு இன்மையால் உருபு முதலியன தொக்கு வருதலின் தொகையாயிற்று என்னும் இலக்கணம் இவை மூன்றற்கும் ஏற்கவில்லை. ஆயின், இரண்டும் பலவுமாகிய சொற்கள் தம்முள் பிழைபடாது இயைந்து நிற்றலின் தொகையாயிற்றென்ற இலக்கணம் அறுவகைத் தொகைக்குமே பொருந்தி வருகின்றது. ஆகவே, 'ஒட்டி ஒரு சொல்லாக இசைத்தலின் தொகையாயிற்று' என்னலே தொகையிலக்கணமாகக் கொள்ளுதற்குரியது; அதுவே ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் கருத்தாம் என்பது சேனாவரையரின் விளக்கமாம்.

ஈண்டு ஒரு வினா 'ஒட்டி ஒரு சொல்லாக இசைத்தலின் தொகையாயிற்று' என்னலே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்து எனின், 'உருபு தொக வருதலும்' (சொல்-114) எனவும், 'வேற்றுமைத் தொக்க பெயா; வயினானும்' (சொல் - 418) எனவும், 'உம்மை தொக்கி பெயர் வயினானும்' (சொல். 418) எனவும் பல இடங்களில் ஆசிரியர் ஓதலால் 'உருபு முதலாயின தொகுதலே தொகை' என்பது ஆசிரியர் கருத்தெனத் தெரிய இங்ஙனம் கூறுவது பொருந்துமா? என்ற வினாவை யெழுப்பிக் கொண்ட சேனாவரையர், அதற்கு இருவகையில் விடையிறுக்கின்றார். அவர் உரைக்குமாறு:-

'அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயின்' (சொல். 94) என்புழி அதுவெனுருபு நின்று கெட்டதாயின் நின்ற காலத்துத் திணைவழுவாம் அத்திணை வழு அமைவுடைத்தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அது தன்னையே விரிப்பினும் அமைவுடைத்து அதனான் முறைப் பொருள் தோன்ற நம்பி மகன் என இரண்டு சொற்றொக்கன வென்பதே ஆசிரியர் கருத்தெனல் வேண்டும். அதனான் உருபும் உவமையும் உம்மையுந் தொகுதலாவது தம்பொருள் ஒட்டிய சொல்லாற் றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாதே நிற்றலேயாம். அல்லதூஉம், வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை யென்பனவற்றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுந் தொக்கு நில்லாமை யானும் அஃதே கருத்தாதலறிக" (சொல். சேனா. நூ. 412) என்பது அவர் கூறும் விடைகளாம்.

(க) அஃதாவது, 'உருபு தொக வருதல்' என்பதற்கு உருபு தொகுதல் (நின்ற சொல் மறைதல்) என்பது கருத்தன்று உருபின் பொருள்பட இரு சொற்கள் சேர்ந்து நிற்க, அவ்வுருபு ஆண்டு வாராமையாம்.

**'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்**
**அதுவென் உருபுகெடக் குகரம் வருமே' (சொல். 94)**

என்னுஞ் சூத்திரத்தில், 'உருபு கெட' என ஆசிரியர் விதந்தோதியமை கொண்டு, 'நம்பியது மகன்' என அதுவென் உருபு விரிந்திருந்தது என்றும் பின்னர் அதுவென் உருபு கெட்டு, 'நம்பிக்கு மகன்' என குகரம் வந்தது என்றும் கொள்ளலாகாது. என்னை எனின்? அஃறிணைக்கேயுரிய அதுவென் உருபு நம்பி மகன் என்ற உயர்திணையின்கண் நம்பியது மகன் என முன்பு விரிக்கப்பட்டுப் பின் கெட்டது எனின், அவ்வுருபு நின்றகாலத்து அதன் நிலை என்ன? என்ற வினாவெழுகிறது. ஆயின், அவ்வுருபு நின்ற காலத்துத் திணைவழுவாம். அதுவென் உருபு உயர்திணை வருமொழியோடு வாராமையால் வழுவமைதி என்னலாம். அங்ஙனம், வழுவமைதி எனக் கொள்வோமேயானால், ஏனைய வழுவமைதிகள் போல, அவ்வுருபும் எப்போதும் கெடாமல் வழுவமைதியாகவே இருக்கலாம் இவ்வுருபே

வரவேண்டுவதில்லை. ஆதலின், நம்பிமகன் என்பதில் நம்பியது மகன் என அதுவுருபு இருந்து தொக்கது என்பது கருத்தன்று. ஆண்டு 'உருபுகெட என்பதற்கு அவ்வுருபு 'வாராதிருக்க' என்பதே பொருளாம். எனவே, நம்பி மகன் என்பதில் அதுவென் உருபு வாராதிருக்க, குவ்வுருபு வந்தது என்று கொள்ளுதலே பொருந்தும். ஆதலின், ஆண்டு நம்பி, மகன் என்ற இரு சொற்களும் சேர்ந்து நிற்பதே தொகை என்பது கருத்தாம். அதனால், 'உருபு தொக வருதலும்' எனவருவன போலும் இடங்களில் உருபும் உம்மையும் உவமையும் தொகுதலாவது எல்லாத் தொகைகட்கும் அவ்வப்பொருளும் அவ்வவ்விடத்துத் தோன்றுமாறு அவ்வவ்வுருபுகளும் வாராதிருக்க நிற்றலே தொகை என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தெனல் வேண்டும் என்பது சேனாவரையர் கூறும் முதல் விடையாம்.

(உ) அறுவகைத் தொகைகளுள், வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகியவற்றுக்கு உருபு உள்ளமையால் அவ்வவ்வுருபுகள் மறைந்து வருவது தொகையெனக் கொள்ளலாம். ஆயின், ஏனைய வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை ஆகியவற்றுக்குத் தொகுதற்காய உருபு இல்லாமையால் அவ்வுருபுகள் மறைந்து வருவது தொகையென்னும் இலக்கணம் அவற்றிற்கு ஏற்புடைத்தன்றாம். ஆதலின், 'உருபின் பொருள்பட இரு சொற்கள் ஒட்டி ஒரு சொல் போல நிற்றலே தொகை' என்னுங் கருத்தே பொருந்துவதாம் என்பது இவா; கூறும் இரண்டாம் விடையாம்.

**நச்சினார்க்கினியர் கருத்து**

இனி 'உருபு தொகுவதே தொகை' என்னுங் கருத்தினராய நச்சினார்க்கினியர், தாம் கூறிய கருத்து ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாம் என்றுரைத்துச் சேனாவரையரை மறுக்கின்றார். அவர் கூறுமாறு:-

'ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும் (எழுத்து - 482) எனவும், செய்யும் செய்த என்னும் கிளவியின்... ஆசிரியர் தொக்கே நிற்கும் எனச் சூத்திரம் செய்தலின், வேற்றுமை யுருபும் உவமவுருபும் உம்மும் வினைச்சொல்லீறும் பண்புணர்த்தும் ஈறும் இத்தொகைச் சொற்கள் அல்லாததோர் சொல்லும் தொக்கு நிற்றலின் தொகைச்சொல் என்பதே அவர் கருத்தாயிற்று'' (தொல். நச்சி. நூ. 411) என்பது நச்சினார்க்கினியர் கூற்றாம்.
அஃதாவது,

**'பண்பு தொகு மொழியும்' (எழுத்து. 482)**
**'தொழில் தொகு மொழியும்' (எழுத்து. 282)**
**'உருபு தொக வருதலும்' (சொல். 105)**
**'பண்பு தொக வரூஉம் கிளவியானும்' (சொல். 418)**
**'உம்மை தொக்க பெயர் வயினானும்' (சொல். 418)**
**'வேற்றுமை தொக்க பெயர் வயினானும்' (சொல். 418)**
**'உம்மை யெஞ்சிய இருபெயர்த் தொகைமொழி' (எழுத்து. 223)**

இன்னோரன்ன சூத்திரங்களை நோக்க, உருபுகளும் அவ்வவ்வீறுகளும் தொக்கு வருதலே தொகை என்னுங் கருத்தே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாம் என்பது நச்சினார்க்கினியார் கூறுங் காரணமாம். அன்றியும், சேனாவரையர் கூறும் இரண்டாங் காரணத்தை நச்சினார்க்கினியர் மறுத்தனர். அவர் மறுக்குமாறு:-

'கேழற்பன்றி, வேழக்கரும்பு என்பனவற்றிற்குத் தொக்கன இன்மையிற் றொகைச் சொல்லாமாறு என்னையெனின், அவற்றிற்கும் ஒன்றையொன்று விசேடித்து நிற்கின்ற

தன்மையை உணர்த்துதற்கு வரும் ‘ஆகிய’ என்னும் வாசகந்தொக்கு நின்றதென்றே கோடும். அன்றி... வடிவு முதலியவற்றிற்கும் அறுவகைத் திரிபினுள் ஏற்பன கொணர்ந்து முடித்தபின், குன்றலுந் தொகையாமென்று உணர்க” (சொல். நச்சி. நூ. 411) என்பது அவர் மறுப்பாம்.

‘வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழி தொக்கன இல்லையெனினும் தொகை என வேண்டப்படுதலின் ஒட்டி ஒரு சொல் நீர்மைப்படுதலே தொகை இலக்கணம்’ என்ற சேனாவரையர் கருத்தே ஈண்டு நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுகிறது. வேழக்கரும்பு, கேழற்பன்றி என்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளுக்கு தொகுதற்கு உருபு இன்மையால் (இருபெயரொட்டுப் பண்புத்தொகைகட்கு உருபு இல்லை) இவை உருபு தொக்கது என்னலாமோவெனின், இத்தொகைகளுள் ஒன்றையொன்று விசேடித்து நின்ற தன்மையை உணர்த்துதற்கு வந்த ‘ஆகிய’ என்னுஞ்சொல் அங்குத்தொக்கது எனக் கூற வேண்டும். அன்றியும், இத்தொகைகளுள் ‘ஆகிய’ என்னுஞ்சொல் தொக்கு நிற்றலின் இவையும் ‘உருபு முதலியன தொக்கு நிற்றலின் தொகையாயின’ என்னும் தொகைச்சொல் இலக்கணத்தில் பொருந்தும். வேழக்கரும்பு, கேழற்பன்றி என்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகையை ‘வண்ணத்தில் வடிவில்’ (சொல். எச்ச. நூ. 15) எனவருஞ் சூத்திரத்தில் ‘என்ன கிளவியும்’ என்ற இலேசினால் கூறினார் ஆசிரியர். (ஆசிரியர் எடுத்தோதாது இலேசினால் தழுவிக் கொள்வதற்குச் சிறப்புக் கொடுத்துக் கூறல் கூடாது). ஆதலின், ‘உருபு தொகுவதே தொகை’ எனும் கொள்கையே வலியுடைத்தாம் என்பது நச்சினார்க்கினியர் வாதம்.

இங்ஙனமே, மேலுங்கூறுவாராய், “என்ன கிளவியும்’ (எச்ச. 20) என்றதனான் கொள்வன வருமொழி இன்றி நிலைமொழியும் பொருள் உணர்த்தி நிற்கும் என்பது ஆண்டுக்கூறுதும். அன்றியும், செய்தான் பொருள், இருந்தான் குன்றத்து என வழங்குவன ஒட்டி ஒரு சொல் ஆகாமையும், செய்யுட்கண்.... ஒட்டி ஒரு சொல் ஆகாமையும் உணர்க.

அதுவென் வேற்றுமை (சொல். 94) என்னுஞ் சூத்திரத்து அது என் உருபுகெட என்றதனான் அதுவென் உருபு நின்றால் அல்லது கெடுதல் இன்மையின், அது நின்று கெட்டது என்னும் பொருள்தரல் ஆண்டுக் கூறிப்போந்தாம். அதனான் ஈண்டுச் சேனாவரையர் கூறிய பொருட்கு விடையின்மை உணர்க”. (சொல். நச்சி. நூ. 412) எனவும் விளக்குகின்றார்.

அ..்தாவது, ஒட்டி ஒரு சொல்லாக இசைதலே தொகையிலக்கணம் எனின், செய்தான் பொருள், இருந்தான் குன்றத்து என வழங்குவனவற்றிற்கு அவ்விலக்கணம் பொருந்துமாறில்லை என்கிறார் நச்சினார்க்கினியர். அன்றியும், ‘அதுவென் வேற்றுமை’ (சொல். 94) எனவருஞ் சூத்திரத்தைப் பற்றிச் சேனாவரையர் கூறியதை, ‘உருபுகெட’ என்ற சொல்லிற்கு ‘உருபு நின்று கெட்டது’ என்பது பொருளாகுமேயன்றி, ‘உருபு நில்லாது கெடும்’ என்றல் பொருளாகாது என நச்சினார்க்கினியர் மறுத்தனர். அதனான், ‘உருபு தொகுவதே தொகை’ எனும் இலக்கணமே வலியுறும் என்பது நச்சினார்க்கினியரின் முற்ற முடிந்த முடிபாம்.

**தெய்வச்சிலையார் கருத்து**

‘தொகைச் சொல்லாவது பொருளுணர்த்துஞ் சொல்லாயினும் தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டு சொல் விட்டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இ..்து ஒட்டுப்பெயர் என்னும் குறிப்பும் பெறும். ‘இ..்து தொகைச்சொல் பற்றிய தெய்வச்சிலையாரின் கருத்தாம்.

ஆதலின், ‘இரண்டும் பலவுமாக சொற்கள் தம்முள் பிளவுபடாது இயைந்து நிற்றலின் தொகையாயிற்’றென்பார் கருத்தினரே இவரென்பது இதனாற் புலனாம்.

**பவணந்தியார் கருத்து**

தொகைச் சொல்லிலக்கணம் பற்றிய உரையாசிரியர்களின் இரு திறக் கருத்துக்களையும் ஏற்கும் நன்னூலார்,

**‘பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளி னவற்றி னுருபிடை**
**ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு**
**மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்மொழி’**

**(நன்னூல். பொதுவியல் - நூ. 10)**

எனத் தொகைச் சொற்கு இலக்கணங் கூறுவாராயினர்.

இறுவாய் இதுகாறுங் கூறியவற்றால், அறுவகைத் தொகை மொழிகளும் தொகையெனப் பெயர் பெற்றமைக்குக் காரணங் கூறுங்கால், வேற்றுமையுருபும் உவமஉருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச் சொல்லீறும் தொகுதலின் தொகையாயின என்றும் அவ்வவ்பொருள்மேல் ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட (ஒட்டி ஒருசொல் போலத்) தம்முள் இயைதலின் தொகையாயின் என்றும் உரையாசிரியன்மார் இருதிறக் கொள்கையினரென்பதும், இவர்களுள் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் முன்னைய கருத்தினரென்பதும் சேனாவரையர், தெய்வச்சிலையர் ஆகிய இருவரும் பின்னைய கருத்தினரென்பதும் புலனாம். தொகை என்ற சொற் பொருளாராய்ச்சியில் உரையாசிரியர் கருத்துக்களைச் சீர்தூக்கி நோக்குழி, இவ்விருதிறக் கருத்துக்களுள் ‘உருபு தொகுவதே தொகை’ என்னும் இலக்கணம் சிறப்புடைத்து என்னலாம். அன்றியும், இரண்டு முதலிய சொற்கள் ஒட்டியொரு சொல்லாதலும் தொகையிலக்கணமாம் என்னுங் கருத்து, ‘எல்லாத் தொகையும் ஒரு சொன்டைய’ (தொல். எச்ச. நூ.24) என வருஞ் சூத்திரத்திலிடம் பெற்றுள்ளமையும் ஈண்டுக் கருதற்பாலதாம்.

**துணை நின்ற நூல்கள்**

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், (கு. சுந்தரமூர்த்தியவர்கள் விளக்கவுரையுடன்) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு - 1973.
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம், (ஞா. தேவநேயப்பாவாணர் மற்றும் ஆ. பூவராகம்பிள்ளை விளக்கவுரையுடன்) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு - 1970.
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம், (கு. சுந்தரமூர்த்தியவர்கள் விளக்கவுரையுடன்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், தி 1981.
4. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம், சி. கணேசையர் பதிப்பு, வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், சுன்னாகம், இலங்கை, 1978.
5. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம், இராமகோவிந்தசாமிப் பிள்ளை பதிப்பு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1997.
6. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம், (கு. சுந்தரமூர்த்தியவர்கள் விளக்கவுரையுடன்) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு - 1962.
7. தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையம், கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பின் நிழற்படப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு - 2010.